இனவெறியை எதிர்த்து தெ. ஆப்ரிக்கா நீதிமன்றத் தீர்ப்பு

‘ஒரு குலத்துக்கொருநீதி’ வழங்குவது நீதி முறையாகாது

அப்துர்ரஹ்மான் செய்கை புதுமைக் கிளர்ச்சிக்கு ஒரு வித்து

(0)

மலான் சர்க்கார் மண்டியிடும் காலம் நெருங்கிவிட்டது?

தென் ஆப்பிரிக்க ரயில் வேக்களில் இன ஒதுக்கல் திட்டம் (அபர்தியாட்) செல்லுபடியாகாதென்று தென் ஆப்பிரிக்காவிலுள்ள பிரதான அப்பீல் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது. 1948-ல் கேப்டவுன் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஐரோப்பியரல்லாத தோழர் அப்துல்லா அப்துர்ரஹ்மான் என்றவருக்கு விதித்த தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்துகொள்ள அனுமதித்துள்ளது.

ரயில் வண்டிகளில் சில பெட்டிகளில் ஒதுக்கல் முறையை மலான் சர்க்கார் முதல் முதலாக நுழைத்துள்ளது.

வெள்ளையருக்கென்று ஒதுக்கப்பட்ட பெட்டிகளில் வெள்ளையர் அல்லாதவரை ஏறும்படித் தோழர் அப்துர்ரஹ்மான் தூண்டினாராம். இன வேறுபாடுண்டாக்கிப் பாரபட்சமுள்ளதாகச் சர்க்கார் ‘அபர்தாயிட்’ திட்டம் இருக்கிறதென்று நீதிமன்றத் தீர்ப்பில் கூறி தோழர் அப்துர்ரஹ்மானை அப்பீல் செய்து கொள்ள அனுமதித்துள்ளது.

எல்லா இனத்தவருக்கும் ஒரே விதமான நியாயம் வழங்குவதே நீதிமன்றங்களின் கொள்கையாக இருக்க வேண்டுமென்று கூறி பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் அமுலில் இல்லாமுட்டால் எந்த சர்க்கார் கொள்கையையும் ஆதரிக்க விடியாதென்று தீர்ப்பில் கூறியுள்ளது.

மற்றும் ரயில்வே சட்டத்தின்படி பாரபட்சமாக நடக்கும் இன ஒதுக்கல் திட்டம் செல்லுபடியாகாதென்றும், நாட்டில உள்ள எல்லா மக்களுக்கும், இன வேறுபாடு காட்டாமல்தான் ரயில்வேயை நாடு அமைத்துக் கொடுத்திருக்கிறதென்றும் கூறிற்று.

தீர்ப்பு கூறிய உடனே ரயில்வே போக்குவரத்து மந்திரி தோழர் பால்சாசர் ஒரு அறிக்கையில் இனவேற்றுமை முறை ரயில்வேக்களில் கண்டிப்பாகக் கைக்கொள்ளப்படுமென்றும், குற்றவாளிகள் தொடர்ந்து தண்டிக்கப்படுவார்களென்றும் அறிவித்தார்.

1949-ல் ரயில்வே சட்டம் திருத்தப்பட்டிருக்கிறதென்றும், அதனால் அப்துர்ரஹ்மான் தண்டிக்கப்பட்ட சட்டம் பூர்வமானதேதென்றும் அவர் கூறினர்.

பிறந்த நாட்டில் பிழைக்க வழியின்றி வாழவந்த புகுந்த வெள்ளையர் ஆப்ரிக்காவில் செய்யும் அட்டூழியங்கள் நமக்குப் புதியவையல்ல. வெள்ளையர், கருப்பர் என்ற பேதப்படுத்தி சொந்த நாட்டு மக்களாகிய ஆப்ரிக்க சுதேசிகளையும், ஆசிய மக்களையும் வெள்ளையர் வாழும் பகுதிகளில் காலெடுத்து வைக்கக் கூடாது. நிலம் வாங்கக் கூடாது என்று திட்டங்கள் வகுத்து வருகின்றனர்.

கல்வி அறிவு அதிகம் பெற வசதி பெருத காரணத்தால் கீழ் நிலையில் உள்ள ஆப்ரிக்க நீக்ரோ சுதேசிகள் வெள்ளையர் வாக்கே தேவவாக்கு என்று இருக்கின்றனர்; உண்மை நிலை அவர்களுக்குத் தெரியாது; வாழப் பிறந்தவர் வெள்ளையர், அவரிடம் அடிமைத் தொண்டுபுரிந்து வாழ்வதே நம் கடன் என அவர்கள் இருக்கிறார்கள். வெள்ளையர் வந்து ஆப்ரிக்காவில் குடியேறியபோது ஆப்ரிக்கவாசிகள் காட்டுமிராண்டிகளாக இருந்ததால் நாட்டைப் பண்படுத்தவும், சுரங்கங்களில் வேலை செய்யவும் ஏராளமான இந்தியர் குறிப்பாகத் திராவிட நாட்டு மக்கள் தென ஆப்ரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களது உழைப்பையெல்லாம் உறுஞ்சியபின், கூலி வேலை செய்ய ஆப்ரிக்க சுதேசிகளைப் பழக்கிக் கொண்டபின் இந்தியரை நாட்டை விட்டு விரட்டப் பல வழிகள் கைக்கொள்ளப்பட்டன. ஆனால் அவர்கள் மனந்தளரவில்லை வெள்ளையரின் திட்டங்களை எதிர்த்துப் போராட ஆரம்பித்துள்ளார்கள். அதன் ஒரு பகுதிதான் தோழர் அப்துல் ரஹ்மானின் ரயில்வே கிளர்ச்சி தண்டிக்கப்பட்டும் மனச்சோர்வு அடையாமல் நீதி கோரினர், நீதி நெறி தவறவில்லை; இனவாரி ஒதுக்கல் திட்டம் செல்லாதென்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த இன ஒதுக்கல் திட்டத்தைச் மலான் சர்க்கார் இன்னும் சட்டமாக்கவில்லை; ஆக்க முயன்றதில் விளைவு ஒரு தரம் சர்க்கார் கட்சியே தோல்வியடைந்துள்ளது!

Phone No 4502 Regd. No. M. 5458

விலை அரை அணு இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (25—5—50) வெளியூர் (26—5—50) [இதழ் 261

சென்னையில் தோழர் அம்பேத்கார்

(0)

பௌத்த மாநாட்டில் கலந்துகொள்ள கொழும்பு செல்கிறார்

சென்னை, மே 24—

இந்திய சர்க்கார் சட்ட மந்திரி டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் தம்முடைய மனைவியுடன் நேற்று ஹைதராபாத்திலிருந்து விமான மூலம் சென்னைவந்து சேர்ந்தார். அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனக் காரியதரிசி தோழர் ராஜ்போஜ் அவர்களும் உடன் வந்தார்.

நகரிலுள்ள தாழ்த்தப்பட்டோர் சம்மேளனக் கிளைக் கழகங்கள் சார்பில் தோழர் அம்பேத்காருக்கும் அவருடைய மனைவியாருக்கும் மாலை போட்டு வரவேற்பளிக்கப்பட்டது.

விமானநிலயத்தில் தோழர் என். சிவராஜ், சென்னை சர்க்கார்தொழில் வளர்ச்சி டைரெக்டர் தோழர் எம். டி. ராஜு உள்ளிடப் பலர் வந்திருந்தனர்.

நகருக்கு வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் பத்திரிகை நிருபர்கள் கன்னிமாரா ஓட்டலில் தோழர் அம்பேத்காரைப்பேட்டிகண்டபோது பொதுப் பிரச்னைகள் எதைப் பற்றியும் தான் ஒன்றும் கூற முடியாதென்று கூறிவிட்டார். தனிப்பட்ட முறையில் இலங்கைக்குச் செல்லும் வழியில் சென்னையில் ஒரு நாள் தங்குவதாக அவர் அறிவித்தார், “பல ஆண்டுகளாக பௌத்த மதக் கோட்பாடுகளைப் பற்றி நான் ஊக்கமாகப் படித்து வந்திருக்கிறேன். பௌத்த மத மாநாடு கூட்டுபவர்கள் அழைப்பனுப்பியதின் பேரில் மாநாட்டில் கலந்துகொள்ளக் கொழும்பு செல்கிறேன்” என்று கூறினர்.

இன்று பிற்பகல் தோழர் அம்பேத்கார் தம் மனைவியுடனும் தோழர் ராஜ்போஜுடனும் கொழும்புக்குப் புறப்படுகிறார். கொழும்பிலிருந்து டில்லிக்குப் போகும்போது அவர் சிறிது நேரம் சென்னையில் தங்கலாமென்று கூறப்படுகிறது.

கன்னிமாரா ஓட்டலில் தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதிகள் பலர் தோழர் அம்பேத்காரைப் பேட்டிக் கண்டனர்.

நைரோபி ஸ்டிரைக்

இந்தியர்கள்சேரவில்லை

நைரோபியில் நடைபெற்று வரும் ஸ்டிரைக்கில் இந்தியர்களையும் எப்படியாவது சேரச் செய்ய செய்யப்பட்ட முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. இந்தியர்கள் மனதைக் கவருவதற்காக ‘சாத்வீக ஒத்துழையாமை’ ‘அஹிம்சை’ என்ற பதங்களை எல்லாம் உபயோகித்து ஆர்பாட்டக்காரர்கள் இந்தியர்கள் மீது வலை வீசப்பார்த்தார்களாம். ஆனால் இந்தியர்கள் இதில் கண்டிப்பாக சேர மறுத்து விட்டனராம்.

நீதிமன்றத்தை அவமதித்ததாக தண்டனை

(0)

எதிர்த்து அப்பீல் செய்ய சுப்ரீம் கோர்ட் அனுமதி

புதுடில்லி, மே 24—

கோர்ட்டை அவமதித்த குற்றத்துக்காகச் சென்னை நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டதை எதிர்த்து அப்பீல் செய்துகொள்ளப் “பிரஜாராஜ்யம்” என்ற தெலுங்கு இதழின் ஆசிரியர் தோழர் ராமகிருஷ்ணரெட்டிக்கு பிரதான நீதிமன்றத்தில் நேற்று அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

“கோவூர் சப் மாஜிஸ்ட்ரேட் லஞ்ச ஊழல் உள்ளவரா?” என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியதாகத் தோழர். ராமகிருஷ்ணரெட்டி சென்னை உயர்நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டார்.

பிரதான நீதிமன்றத்தில் தோழர் ரெட்டிக்காக வாதித்த வக்கீல், இவ்வாறு தண்டிக்கப்படுவதால் எழுத்துரிமை பறிக்கப்படுகிறது என்று கூறினர். கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள மாஜிஸ்ட்ரேட்டின் நீதி நிர்வாகத்தைப்பற்றி ஒன்றும் எழுதப்படவில்லையென்றும், அவர் மீது ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைக்காக ஜில்லா மாஜிஸ்ட்ரேட் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதே அவர் எண்ணமென்றும் கூறினர்.

அதன்பேரில் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்து கொள்ளப் பிரதான நீதிமன்றம் அனுமதியளித்தது.

ஜார்டன்-டச்சு வார்த்தைப் பேச்சு

அம்மான், மே 24—

ஜார்டனுடன் வர்த்தக சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக ஜெருசலத்திலுள்ள டச்சு கான்ஸல் ஜெனரல் இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

சிட்னி, மே 24—

தென்கிழக்கு ஆசியாவின் அபிவிருத்திக்கு டாலர் மூலதனம் போடப்படலாம் என்று ஆஸ்திரேலியாவில் நம்பப்படுகிறது.

கிழக்கு ஜெர்மன் போலீஸ் படையைக் கண்டு பீதி

கலைக்கவேண்டுமென்று ரஷியாவுக்கு யு. எஸ். குறிப்பு

வாஷிங்டன், மே 24—

கிழக்கு ஜெர்மனியில் சுமார் 50,000 பேர் கொண்ட போலீஸ் படையைஏற்படுத்தியிருப்பதை பிரிட்டிஷ் பிரெஞ்சு சர்க்கார்கள் கண்டித்திருப்பதை ஆதரித்தும், அந்த படையை கலைத்துவிட வேண்டும் என்று கோரியும் ஒரு குறிப்பை யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் ரஷ்ய சர்க்காருக்குஅனுப்பியிருக்கிறது.

சமாதானம் நிலவவேண்டும் என்ற உண்மையான நல்ல எண்ணம் ரஷ்யாவுக்கு இருக்கும் பட்சத்தில் இந்த ராணுவத்தை கலைத்துவிட்டு மறு வேலைபார்க்கவேண்டும்என்று யு. எஸ் சர்க்கார் தன் குறிப்பில் வற்புறுத்தியிருக்கிறது. போலீஸ் படை என்ற பெயரில் ஒரு பெரும் ராணுவத்தை ஏற்படுத்தியிருப்பது மிகவும் ஆட்சேபிக்கத் தக்கதாகும் என்பதையும் யு. எஸ். எடுத்துக்காட்டியிருக்கிறது.

மாலை மணி

சென்னை 25-5-50 வியாழக் கிழமை

ஆசையும் ஆத்திரமும்!

'ஆசை யாரைவிட்டது' என்றொரு பழமொழி வழங்குவதை யாரும் கேட்டிருக்கலாம்.

ஆசை யாரைவிட்டாலும், விடாவிட்டாலும், இந்த நாட்டில் குடிபுகுந்த ஆதிக்க வகுப்பாரின் பரம்பரையினரை இம்மியளவும் விட்டதில்லை!

எவ்வளவு கிடைத்தாலும் பல்லிளித்துக்காட்டும் பஞ்ச புத்தியும்; யாசகம் செய்வதையே புருஷ இலக்ஷணம் என்று கொள்ளும் பண்பும், வஞ்சகம், சூழ்ச்சி, ஏமாற்று, ஆதிக்கம் இவைகளால் பிறர் பொருளையும், உழைப்பையும் கவரநினைக்கும் பேராசையும், தம்பொருளையும், உயிரையும் காப்பாற்ற எதையும் விட்டுக்கொடுக்கும் இழிமுறையும் ஆதிக்க வகுப்பாரின் பரம்பரைப் பண்புகளாகவே இருந்து வருகின்றன. இன்னமும் அவைகள் மாறவில்லை.

* * *

— திராவிடத்தில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒதுக்கித் தள்ளப்பட்டுக்கிடக்கும் நாட்டிற்குரிய பெருங்குடி மக்களினம், வாழ்ந்தாலும் சரி, அதுவாழாவிட்டாலும் சரி, அரசாங்க உரிமைகள்—சலுகைகள்—வசதிகள் எல்லாவற்றையும், ஏகபோகமாகத் தாங்களே நுகரவேண்டும் என்ற பேராசை, ஆதிக்க வகுப்பாரிடத்து, இந்த நாட்களில் கொழுந்து விட்டு எரிகிறது! இசைத் திராவிடப் பெருங்குடியினம் இன்னமும் உணராமல், நுகத்தடியின் கீழ்த் தானே குனிந்துகொடுக்கும் மாடுபோல இருந்துவருகிறது. திராவிடர்கள் ஏமாளிகளாய், எலிகளாய், முயல்களாய் இருந்து வருவதால்தான், எத்தர்கள் ஏமாற்றி வாழ்ந்து வருகிறார்கள்!

வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் பார்ப்பனரல்லாதாரைச் சிறிது தூக்கிவிடவேண்டி, அரசாங்க உலுவலகங்களில், வகுப்புவாரிபிரதிநிதித்வமுறை நீதிகட்சியினரால் புகுத்தப்பட்டது. வகுப்புவாரி முறை, எண்ணியபடி முழுதும் நிறைவேற்றப்படாமல சீர்குலைக்கப்பட்டிருப்பதாலும், ஓரளவுக்குப் பார்ப்பனரல்லாதார்க்குப் பயன்பட்டு வருகிறது என்னலாம். இந்த ஓரளவு பயன கிடைப்பதே ஆதிக்க வகுப்பார்க்கு வயிற்றெரிச்சலைக் கிளப்பி விடுகிறது. அரசாங்கத்தின் பயன்கள் எல்லாவற்றையும் அவர்கள் ஏகபோகமாகத் தாங்களே அடையவேண்டும் என்பதற்குத் துடியாய்த் துடிக்கிறார்கள். அரசாங்க உலுவலாளர் பதவிகளில் உரிய பங்கு பார்ப்பனரல்லாதார்க்குச் செல்வது கண்டு கதறுகின்றனர்; ஆதிக்க வகுப்புப் பத்திரிகைகள் பத்தி-பத்தியாய்ப் பங்கு வழங்கும் சர்க்காரை வசைமாரி பொழிகின்றன; அவ்வகுப்பின் பேச்சாளர்கள் மேடைதோறும் சதறுகின்றனர்; அவ்வகுப்பின் பாதுகாவலராக 'அவதரித்துள்ள' தென்னேட்டி விசுவநாதம் சமயம் கிடைக்கும் போதெல்லாம் விஷம் கக்குகிறார்!

சென்னை மராமத்து இலாக்காவுக்காக விளம்பரப்படுத்தப்பட்ட 500 சூப்ரவைசர் வேலைகளுக்கு, ஒரு பார்ப்பனரைக்கூட எடுக்கவில்லையாம்; அது குறித்துத் தென்னேட்டி விசுவநாதம் 'ஹிந்து', 'இண்டியன் ரிபப்ளிக்' ஆகிய நாள் வெளியீடுகளில் கண்டித்து எழுதியுள்ளார்-இல்லை; இல்லை, கடுவிஷம் கக்கியுள்ளார்!

தென்னேட்டி விசுவநாதனின் சலசலப்புக்கண்டு சஞ்சலமடைந்து விடாமலும், சரணடைந்து விடாமலும், அதற்கு மறுப்பு அறிக்கை வெளியிட்டு அதுபற்றிக்கொண்டுள்ள நீதியின் போக்கை அரசாங்கத்தார் தெளிவுபடுத்தியிருப்பது பாராட்டற்குரியது பாராட்டி மகிழ்வதற்குரியது. சென்னை அரசாங்கத்திற்கு இந்தப்பிரச்சினையிலாவது இவ்வளவு துணிவு பிறந்ததே என்பதை எண்ணி நாம மகிழ்கிறோம்.

மராமத்து இலாகா சூப்ரவைசர் வேலைகளில், பார்ப்பனர்கள் இருக்கவேண்டிய விகிதாசாரத்திற்குமேல் நான்கு மடங்கு அதிகமானவர்களாக இருந்துவருவதாலும், புறக்கணிக்கப்பட்ட — போதுமான விகிதாசாரம் பெறாத வகுப்புகளிலிருந்து ஆட்களைப்பெறுவதற்காகவும் இவ்வாண்டு, பார்ப்பனர்களைத் தவிர்த்து ஏனையோரைப் பொறுக்கி எடுக்க முடிவு செய்யப்பட்டது என்றும், ஆனால் தகுந்த ஆட்கள் கிடைக்காவிட்டால மனுச்செய்துகொண்ட பார்ப்பனர்களுக்குக் கொடுப்பது பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் சர்க்காரின் அறிக்கைத் தெளிவுபடுத்தியுள்ளது. அறிக்கை—புள்ளி விவரங்களோடு தெளிவு படுத்துகிறது.

இப்பொழுது, மராமத்து இலாகா சூப்ரவைசர் வேலை செய்பவர்களின் மொத்த எண்ணிக்கை 1036!

இவர்களில் பார்ப்பனர்கள் 535! மொத்தத்தில் சரிபாதிக்குமேற்பட்ட பங்கு பார்ப்பனர்களுக்கு!

மக்கள் எண்ணிக்கையில் 100-க்கு 3 பேர்களாக உள்ள பார்ப்பனர்கள், மராமத்து இலாகாவில் 100-க்கு 50-க்குமேல் உள்ள அலுவல்களை நுகர்ந்து வருகின்றனர்!

நிலைமை இப்படியிருந்தும் தென்னேட்டி விசுவநாதனார், புதிதாகப் 'பார்ப்பனரை ஏன் எடுக்கவில்லை" என்று ஆத்திரப்படுகிறார்! "ஒரு பார்ப்பனரைக்கூட எடுக்கவில்லை" என்று அழுகிறார்! "ஒரு பார்ப்பனரைக்கூடவா எடுக்கக்கூடாது" என்று ஆயாசப்படுகிறார்! கனல் எழுப்புகிறார்! கடுவிஷம் கக்குகிறார்!

நூற்றுக்குப் பாதிக்குமேல் இருந்தும் **ஆசை அவரை விடவில்லை!**

தென்னேட்டி விசுவநாதம் பேசுகிறார் என்றால், இல்லை! ஆதிக்க வகுப்பின் பேராசை தான் அப்படிப் பேசுகிறது!

500 சூப்ரவைசர் வேலைகளுக்குப், பார்ப்பனர் ஒருவரையும் மனுச்செய்துகொள்ளும்படி இப்பொழுது விளம்பரத்தில் கேட்கப்படவில்லையேயொழிய, முடிவைப் பார்க்கும் போது, பார்ப்பனர்கள் விகிதாச்சாரத்திற்குமேல் பங்கு பெற்றவர்களாகத்தானிருப்பார்கள். அப்படித்தான் முன்பும் பெற்றிருந்திருக்கிறார்கள்; அப்படித்தான் இப்பொழுதும் பெறப்போகிறார்கள்!

1947ல் மொத்தம் 271பேர்களில் 134பேர்கள் பார்ப்பனர்களாகவே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்!

1949 ல் மொத்தம்எடுக்கப்பட்ட 217 பேர்களில் 85 பேர்கள் பார்ப்பனர்கள்!

அப்படித்தானே இவ்வாண்டும் நடைபெறும். வேறு வகுப்புகளில் தகுந்த ஆட்கள் கிடைக்கவில்லை என்று சொல்லி, பார்ப்பனர்களை மிகவாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளத் தெரிந்த ஆதிக்கவகுப்பார் தான் ஆங்காங்கு வீற்றிருக்கின்றனரே! இவ்வளவு வசதிகள் இருக்கும்போது தென்னேட்டியார் குறைபடுவானேன்? பேராசை அவரை ஆட்டிப்படைக்கிறது, அவர் தான் என்ன செய்வார்!

சர்க்காரின் அறிக்கை பொது மக்களின் கவனத்திற்கு ஒரு உண்மையைக் கொண்டுவந்து நிறுத்துகிறது.

மராமத்து இலாகா சூப்ரவைசர் வேலைகளில் விகிதாசாரப்படி 148 பார்ப்பனர்கள்தாம் இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது இருப்பதோ 535 பேர்கள் நான்கு மடங்கு அதிகம். என்றாலும் தென்னேட்டியார்களுக்கு ஆசை அடங்கவில்லை.

பார்ப்பனர்கள் எண்ணிக்கையில் 100-க்கு 3-பேர்களாகவே இருந்தும் வகுப்புவாரி முறையில் 100-க்கு 14 இடங்களை அவர்களுக்கு ஒதுக்கிவைத்துள்ளது.

இவ்வளவு சலுகைகள் இருந்தும், வசதிகள் கிடைத்தும், பெற வேண்டிய விகிதாசாரத்திற்கு மேல் பன்மடங்கு பயன்பெற்றும் ஆதிக்க வகுப்பார்க்கு ஆசை விடவில்லை! ஆசை சிறிது நிறைவேறாதபோது ஆத்திரம் ஏற்படுகிறது! ஆதிக்க வகுப்பாரின் ஆசையும் ஆத்திரமும் ஒருருப் பெற்று ஒன்றாய்த் திரள, முழு உருவமாய் நிற்கிறார் தென்னேட்டி விசுவநாதனார்! இந்த 'அவதாரங்'கண்டு அஞ்சி விடாமல், அறிக்கைவிட்ட அரசாங்கத்தின் துணிவு பாராட்டுதலுக்குரியது! அத்துணிவைச் செயலில் காட்டவேண்டும் அரசாங்கம், என்று வற்புறுத்துகிறோம்!

கலகக்காரர்கள் கைக் குண்டு வைத்திருந்தால் தூக்குதண்டனையாம்!

சிங்கப்பூர் சர்க்காரின் அவசரச் சட்டம்

சிங்கப்பூர், மே 24— கலகக்காரர்களை கைக்குண்டுகளுடன் சிக்கினால் அவர்கள் அதனால் சேதம் விளைவித்தாலும் விளைவிக்காவிட்டாலும் தூக்கிலிடப்படுவர் என்கிற அவசரச் சட்டம் ஒன்றை சிங்கப்பூர் சர்க்கார் பிறப்பித்திருக்கின்றனர்.

கலகக்காரர்கள் பற்றிய தகவல்கள் அறிந்து அதை போலீசாரிடம் தெரிவிக்காவிருந்தால 10 வருஷ சிறை தண்டனை விதிக்கப்படும்.

பிரிட்டிஷ் மந்திரிகள் இருவா இந்தியாவின் முதன் மந்திரி பண்டித நேரு இவர்கள் விஜயம் செய்வதைபொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் மும்முரமாக செய்யப்பட்டு வருகின்றன.

காமன்வெல்த் உறவு மந்திரியுடன் பேச்சு

முக்கியத்துவம் ஒன்றும் இல்லையாம்

லண்டன், மே 24— காமன்வெல்த் உறவு மந்திரி கோர்டன் வாக்கருடன் காஷ்மீர் மத்யஸ்தராக நியமிக்கப்பட்டுள்ள ஸர் ஓவன் டிக்ஸன் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

இச்சம்பாஷணையில் எவ்வித முக்யத்துவமும் இல்லை என்றும், மரியாதைக்காகவே டிக்ஸன் வந்து பேசிவிட்டுப் போனார் என்றும் சொல்லப்படுகிறது.

வழக்கமாக ஹை கமிஷனர்களை சந்தித்துப் பேசும கூட்டத்திலும் கார்டன் வாக்கர் காஷ்மீரைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

அயல்நாட்டிலாகா ஆபீஸில் நடைபெற்ற ஹை கமிஷனர்கள் கூட்டத்தில பெவின் ஜர்மனி விஷயமாக பிரிட்டிஷ் கொள்கை என்ன என்பதை விளக்கினார்.

நூறாண்டுகளுக்கு முன் இருந்த ஒரு அறிஞர்

அணுசக்தியைப் பற்றி அன்றே கூறியுள்ளார்

லண்டன், மே 24— ரேடியோ ஏற்பட காரணமாக இருந்தவரும், ஆனால் ரேடியோ ஒன்றை வைத்து அனுபவிக்காதவருமான பிரபல கணித நிபுணர் ஆலிவர் ஹெவிஸைட் காலமாகி 100 ஆண்டுகளானதையொட்டி அவரு [illegible] தினத்தை அனுஷ்டிக்க விஞ்ஞானிகள் இங்கு இவ்வாரம் கூடியிருக்கின்றனர்.

காற்றில் மின்சார சக்தியுள்ள அணுக்கள் இருக்கின்றனவென்பதை இவர் கண்டுபிடித்திருக்கிறார். மின்சார விஷயத்திலே பல அருமையான முடிவுகளை அவர் கண்டுபிடித்திருக்கிறாரேயொழிய இவர் எந்த சர்வகலாசாலையிலும் படித்தவரல்ல. இவர் அணுசக்தியைக் குறித்து முன்பே பின் வருமாறு கூறியிருக்கிறார்.

"இப்பொழுதைய உலகத்தின் முழு கலை முன்னெச்சரிக்கையின்றி நிற்கிறது. பச்சையத்திலும் ரேடியம் எல்லாம் அணுசக்தி அபிவிருத்தியை சோதிக்கும்."

உலக வர்த்தக மாநாடு

இந்தியாவும் கலந்துகொள்ளும்

புதுடெல்லி, மே 24— இங்கிலாந்தில் டோர்கே என்ற இடத்தில் செப்டம்பர் 28-ந் தேதி கூடவிருக்கும் சர்வதேச வர்த்தக மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியா சம்மதித்திருக்கிறது.

யுனைடெட் ஸ்டேட்சுடன் இதர நாடுகள் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை வசதியான முறையில் அமைத்துக்கொள்ள இம்மாநாட்டில் வழிவகை செய்யப்படும். இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் 23 நாடுகளுடனும் யுனைடெட் ஸ்டேட்ஸ வர்த்தக உடன்படிக்கை செய்துக்கொள்ளும்.

இந்தியா—யுனைடெட் ஸ்டேட்ஸ் வியாபாரத்தைப் பெருக்க ஒரு மாநாட்டைக் கூட்டி ஆலோசிக்க இந்திய சர்க்கார் வர்த்தக இலாகா திட்டம் போட்டிருக்கிறது. யுனைடெட் ஸ்டேட்ஸுடன் வியாபாரம் செய்யும் வர்த்தகர்களைக் கூட்டி அவர்களுடைய கருத்தையும் அறிய இந்திய சர்க்கார் முயலும்.

தென் கிழக்கு ஆசியாவுக்கு உதவி

ஜப்பானுக்கும் கிடைக்குமா?

ஸிட்னி, மே 24— தென் கிழக்கு ஆசியாவுக்கு கிடைக்கும் உதவியில் ஜப்பானையும் சேர்த்துக்கொள்வதா அல்லது வேண்டாமா என்ற பிரச்னை ஸிட்னி காமன்வெல்த் மாநாட்டில விவாதிக்கப்பட்டதாக 'குளோப்' விசேஷ நிருபர் கூறுகிறார்.

உதவி, தென் கிழக்கு ஆசியாவிலுள்ள நாடுகள் எல்லாவற்றிற்கும் உண்டு என்றால் ஜப்பான் இப்போதோ அல்லது பின்னரோ ஜப்பானையும் சேர்த்துக்கொள்ளவே வேண்டும் என்று மாநாட்டில்பொதுவான அபிப்பிராயம இருந்ததாக அவர் கூறுகிறார்.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் மூன்று நாடுகளும், தென் கிழக்கு ஆசியாவில் தேவையுள்ள எல்லா நாடுகளுக்கும், உதவியளிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கின்றன. ஆகவே சென்ற யுத்தத்தில் ஜப்பான் எதிரி நாடாக இருந்தது என்பதற்காக உதவிமறுக்கப்படக்கூடாது என்று கூறப்படுகிறது.

மண்ணெண்ணை பங்கீடு கட்டுப்பாடு

பம்பாயில் ஒழிக்கப்படுகிறது

பம்பாய், மே 24— மண்ணெண்ணைப் பங்கீட்டுக் கட்டுப்பாட்டை ஜுன் 1-ந் தேதியிலிருந்து நீக்கிவிடப் பம்பாய் சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

இதன்படி பங்கீட்டு அட்டைகளைக் காட்டி எவ்வளவு மண்ணெண்ணை வேண்டுமானாலும் வாங்கிகொள்ளலாம்.

ரஷ்யாவின் கவனம்

மத்ய கிழக்கு பக்கம் திரும்புமாம்!

லண்டன், மே. 24—

தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸத்தை ஒடுக்க முழுமுரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்போல் தெரிவதால் ரஷ்யா தன் கவனத்தை மத்ய கிழக்கில் திருப்பலாம் என்று "மாஞ்செஸ்டர் கார்டியன்" எழுதியிருக்கிறது.

அது எழுதியிருப்பதாவது:- ஸ்பெண்டர் திட்டம் ஸிட்னி மகாநாட்டின் முடிவு இவைமூலம் கம்யூனிஸத்தை தென் கிழக்கு ஆசியாவில் ஒடுக்க முடியும் ஆனால் மத்திய கிழக்கில் வழியாக அரபு நாடுகளில் ரஷ்யா தன் கைவரிசையைக் காட்டுவதை தடுக்க வழி செய்யப்படவேண்டும். இதை எல்லாம் எதிர்பார்த்தே பெவின் பர்ஸியா, துருக்கி, கிரீஸின் சுதந்திரத்தில் கை வைக்கக்கூடாது என்று ரஷியாவை எச்சரித்திருந்தார்

அம்மன், மே 23—

இதர அரபு நாடுகளுடன் உபயதரப்பு விமான உடன்படிக்கை செய்துகொள்ள ஜார்டன் தீர்மானித்திருக்கிறது.

அனுதாபிக்குச் சீட்டு

ஆட்டவா, மே 23—

கிழக்கு ஜர்மனியிலுள்ள சுரங்கத் தொழிலாளர்கள் தங்கள் டைரக்டர் ஒருவர் கம்யூனிஸ்ட் அபிமானி என்று தெரிந்தது. அவரை வெளியேற்றும்படி செய்திருக்கின்றனர்.

கட்டுப்பாட்டைத் தளர்த்துக!

லண்டன், மே 23—

யுத்தத்திற்குப் பின்பு ஜப்பானிய கைத்தொழிலைக் கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்களை தளர்த்த வேண்டும் என்றும், தாங்களாகவே ஏற்படுத்திக்கொள்ளும் கட்டுப்பாடுகள் மூலம் இன்னும் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம் என்று ஜப்பானிய ஜவுளி முதலாளிகள் அதிகாரிகளை கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இதற்கு அவர்கள் இணங்கினால் ஜப்பானிய ஜவுளிகளின் ஏற்றுமதி விலை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

உல்லாசப் பிரயாணிகள் தரும் 57 லட்சம்!

கொழும்பு, மே 24—

சென்ற ஆண்டில் டூரிஸ்டுகளால் இலங்கைக்கு ரூ. 57 லட்சம் வருமானம் கிடைத்திருக்கிறது.

இவ்வாண்டில் முதல் மூன்று மாதங்களில் ரூபாய் 17 லட்சம் கிடைத்திருக்கிறது.

அநேக டூரிஸ்டுகள் பிரிட்டனிலிருந்துதான் வந்தார்கள். அதற்கடுத்ததுதான் இந்தியாவும் யுனைடெட்ஸ்டேட்ஸும். இவ்வாண்டு முதல் மூன்று மாதங்களில் இந்திய விஸிட்டர்களால் மாதசராசரி ரூ. 24000 கிடைத்திருக்கிறது.

இராக்கின் புது உணவு திட்டம்

பாக்தாத், மே 24—

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் இராக் கமிட்டி புது உணவு திட்டம் ஒன்று தயாரித்து இராக் மந்திரி சபைக்கு யோசனை கூறியிருக்கிறது.

இதன் பொருட்டு உணவு நிபுணர் டாக்டர் அப்பாஸ் இராக்கிற்கு அனுப்பப்படுவார்.

6 ஆண்டுகளுக்குப் பிறகு...?

பாரிஸ், மே 23—

ஒரு பிரெஞ்சுக்காரரிடமிருந்து 40,000,000 பிராங்க் மதிப்புள்ள நகைகளை களவாடப்பட்டு 6 ஆண்டுகளுக்குப் பின் இப்போது பாரிஸ் போலீஸார் குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இக்களவு ஆண்டுகளாக மார்ஸைலஸ், டூலூஸ், பாரிஸ், போர்டோ ஆகிய இடங்களில் புலன் விசாரணை நடத்தப்பட்டதாம். (ரூடோம்)

ஜார்டன் ராணுவ தூதுக்குழு

அம்மான், மே 23—

பிரிட்டனுக்கு மற்றொரு ஜார்டன் தூதுக்குழு விமானத்தில் புறப்பட்டு சென்றிருக்கிறது. பல்வேறு பிரிட்டிஷ் ராணுவ ஸ்தலங்களுக்கும் இக்குழு விஜயம் செய்யும்.

கிசான் தலைவர் உண்ணாவிரதம்

தூத்துக்குடி, மே 19—

மாக்கோட்டைபுரம் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு இழைக்கப்பட்ட அநீதியை உணர்த்த மூலமாகச் சென்ற சனிக்கிழமை யிலிருந்து உண்ணாவிரதம் இருந்து வரும் தோழர் பால்பாண்டியன் 12 நாட்களுக்கு மேல் தம்முடைய எடையை இழந்துவிட்டார். இவர் திருநெல்வேலி ஜில்லா கிசான் (விவசாயிகள்) சங்க பத்துக் காரிய தரிசியாவார்.

இந்த உண்ணாவிரதத்தை ஆதரிக்கு முகமாக ஒரு பொதுக்கூட்டமென்று தூத்துக்குடியில் நடத்தப்பட்டது. தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் அநீதியைத் தடுக்க சர்க்கார் உடனே முன்வர வேண்டுமென்று கூட்டத்தில் பேசப்பட்டது.

அகில இந்திய குடியரசுத்தொழிலாளர் ஸ்தாபனத் தலைவர் தோழர் ஜே. பி. குமாரப்பா தோழர் பாண்டியனைச் சந்தித்தார்.

உல்லாச படகோட்டும் சங்கம்

லண்டன், மே 23—

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் மெம்பர்கள் தங்களுக்கென்றே தனியாக ஒரு உல்லாச படகோட்டும் சங்கம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

இந்தியா—சிரியா வர்த்தகம்

டமாஸ்கஸ், மே 24—

இந்தியாவிலுள்ள வியாபாரிகள் சிரியாவுடன் வர்த்தகத்தை பெருக்கிக்கொள்ள மிகவும் விரும்புவதாக சிரியா பொருளாதார இலாகாவுக்கு தகவல் கிடைத்திருக்கிறது. இந்தியாவிலிருந்து என்ன பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படும், இந்தியாவுக்கு என்னபொருள்கள் தேவையாயிருக்கும் என்கிற விபரங்களும் அளிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

காமன்வெல்தின் சாதனை

கன்சர்வேடிவ் தலைவர் பாராட்டு

ஒண்டேரியோ, மே 24—

காமன்வெல்த் மகத்தான சாதனையை நிறைவேற்றியிருக்கிறது என்று கனடாவின் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் ஜியார்ஜ் ட்ரூ போர்க் நிருபரிடம் கூறினார்.

இக் காமன்வெல்த் நிலைமை இதற்கு ஆதிகாலமுதல் பூரணமாக ஒத்துழைத்து ஜனநாயகத்தைப் பலப்படுத்த ஆரம்பித்துவிட்டால் பிரிட்டிஷ் ஒத்துழைப்புக்கு மிகவும் நல்ல பெயர் கிடைக்க ஆரம்பித்துவிடும் என்றும் அவர் கூறினார்.

படங்கள் திறப்புவிழா!

விளக்கை, மே 18—

விளக்கை (ஆண்டிமடம்) 16-5-50 இல் தேவாங்கர்தெரு கே. எஸ் நீலகண்டன் வீட்டில் டி பூ தோழர் கே. பி. அருணன் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் காரியதரிசி சி. என். அண்ணா, புரட்சிக்கவி பாரதிதாசன் தோழியர் சத்தியவாணிமுத்து, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, முதலியவர்களின் படங்களும் திராவிடர் கழக பெரியார் ஈ. வெ. ராமசாமி, முன்னாள் முதலமைச்சர் தோழர் ஓ. பி. இராமசாமி ரெட்டியார், நகைச்சுவை அரசரும் கலைவாணருமான தோழர் என். எஸ் கிருஷ்ணன் நகைச்சுவை அரசி தோழியர் டி. ஏ. மதுரம், நடிப்புப் புலவரும், சீர்திருத்தவாதியுமான தோழர் கே ஆர் இராமசாமி முதலியவர்களின்படங்கள்விளக்கைத் தோழர் டி. ஏ. எஸ். மணியன் திறந்து வைத்து சொற்பொழிவாற்றினார் பின்பு தோழர் கே. எஸ். தண்டபாணி நன்றிகூற கூட்டம் இனிது கலைவுற்றது.

மதப்பித்தர்களுக்கு டெலிவிஷன் ஏன்?

ரோம், மே 24—

போப் அறையில் இரு டெலிவிஷன் ஸெட்கள் வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், இதர டெலிவிஷன் ஸெட்கள் இதர பாதிரி மடங்களில் மத ஸ்தாபனங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் தெரியவருகிறது.

ஆண் பெண் வளர்ச்சி

லண்டன், மே 24—

பெண்கள் தங்களைப்போல் அதே வயதுள்ள பையன்களை விட 2 அல்லது $2\frac{1}{2}$ ஆண்டு வளர்ச்சி அதிகமாக வளர்கிறார்கள் என்பது விஞ்ஞான ரீதியாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பத்தேமுக்கால் வயது முதல் பதினேழு முக்கால் வயது வரையில் பையன்களிடம் காணப்படுவதை விட வளர்ச்சி பெண்களிடம் அதிகம் தென்படுகிறது என்பது ஆராய்ச்சி மூலம் அறியப்பட்டிருக்கிறது.

ம. மா. தி. மு. க. மாநாடு வரவேற்புக்குழுக் கூட்டம்

21—5—50 ஞாயிறு பகல் 3 மணிக்கு அழகரடியில் தோழர் தா. அவுடையப்பன் அவர்கள் தலைமையில் வரவேற்புக்குழுக்கூட்டம் நடைபெற்றது மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் வரவேற்பு குழு உறுப்பினர்கள் வந்திருந்தார்கள்.

மாநாட்டின் ஆரம்ப ஏற்பாடுகள் பெரும்பாலு முடிந்து விட்டபடியால் மாநாட்டை ஏற்கனவே முடிவு செய்தபடியே இந்தினங்கள் நடத்துவதாக ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மற்றும் மாநாட்டு வேலைகளுக்கான பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டுக்கூட்டம் முடிவுற்றது.

மாநாட்டு வேலைகள் யாவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. 10—6—50 சனிகிழமை மாலை 4 மணிக்கு மநாடு துவங்கி இரவு 7 மணிக்கு முடிவுறும், இரவு 10 மணிக்கு மதுரை அழகரடி புதுமலர்ச்சி நடிக மன்றத்தாரால் "நிலை" என்னு நாடகம் நடக்கப்பெறும். மறுநாள் 11—6—50 ஞாயிறு காலை 8 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இரவு 8 மணிவரை மாநாடு நடைபெறும். அன்று இரவு 10 மணிக்கு தோழர் சி. என் அண்ணாத்துரை, கே.ஆர்.ராமசாமி, "முழவினரால் "சந்திரமோகன்" என்ற நாடகம் நடத்தப்படும்.

சாப்பாடு விஷயத்தை கவனித்து நடத்தும் பொறுப்பு மாநாட்டுப் பொருளாளர் இ காத்தான் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது பல மாநாடுகளில் சமையல் செய்து அனுபவமுள்ளவிருதுநகர் சமையல்காரர்களை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாநாட்டைச் சிறந்த முறையில் நடத்துவதற்காக வரவேற்புக்குழுவினர் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

10-6-50 இரவு உணவும், 11-6-50 காலை சிற்றுண்டியும் உள்ள டிக்கட் ரூ 1—0—0

11-6-50 பகல் உணவும் இரவு உணவும் உள்ள டிக்கட் ரூ. 1—0—0

என்று தனித்தனிபாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்திலுள்ள தி. மு கழகக் கிளைகளின் நிர்வாகிகள் தங்கள் தங்கள் ஊர்களுக்குத் தேவையான மாநாட்டு டிக்கட்டுகளை முன் கூட்டியே பெற்று விற்பனை செய்து ஊக்கமுடன் ஒத்துழைத்து மாநாட்டை முழு வெற்றியுடன் நடத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எம். அய்யாசாமி,
விளம்பர உறுப்பினர்.

வெண்டர்லிங் ஹாலந்துக்கே அனுப்பப்படுவார்

லண்டன், மே 24—

இந்தோனேஷியாவில் கலகம் செய்த வெஸ்டர்லிங்கை சிங்கப்பூர் சர்க்கார் ஹாலந்திற்கே அனுப்ப முடிவு செய்து விட்டதாகத் தெரிகிறது.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

நன்கொடைச் சீட்டுகள் கிடைக்குமிடம்

கே. சிவசாமி ஜவுளிக்கடை, ரங்கே கவுடர் வீதி.

என் பி சாமி, நெய் மண்டி 5 ரோடு சமீபம், இராச வீதி.

எஸ். டி சிதம்பரம், பிஸ்கட் பாக்டரி சுக்கிரவாரப்பேட்டை (துயவர் வீதி)

ஹோட்டல் ஸ்டார், போர்டிங் & லாட்ஜிங், பழைய போஸ்டாபீஸ் வீதி & ஜெயில் ரோடு.

மாநாட்டு அலுவலகம், ஸ்டார் பில்டிங் 8/20 ஜெயில் ரோடு.

ராயல் இந்து ரெஸ்டாரண்ட், கோவை (ஆர் எச். ஆர்)

ஓட்டல் வருணோதயம், ஒப்பணக்கார வீதி, கோவை.

புட்ப விலாஸ் லாண்டரி, கிராஸ் கட் ரோடு, காந்திபுரம், கோவை.

ஒலிபெருக்கி ஏற்பாடுகள்
ராபி &Co., எலக்ட்ரிகல்ஸ் திருச்சி

திமிங்கலங்கள் கரையில் ஒதுக்கப்பட்டன

லண்டன், மே 24—

ஸ்காட்லந்தில் மற்றொரு ஸ்காட்டிஷ் கடல் ஓரங்களில் சுமார் 147 திமிங்கலங்கள் கரையில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு டன்பார் நகருக்கருகாமையில் இருக்கின்றனவாம். இவைகளைப்பார்க்க ஏராளமான ஜனங்கள் பஸ்களிலும், ரயில்களிலும் வந்தவண்ணமிருக்கின்றனர். குட்டி திமிங்கலங்களை மீண்டும் கடலில் போகும்படிச் செய்தால் அவை மீண்டும் கரைக்கே வந்து சேருகின்றனவாம்.

யூப்ரேடீஸ் நதிமீது பாலம் கட்ட திட்டம்

டமாஸ்கஸ், மே 24—

யூப்ரேடீஸ் நதிமீது பாலம் ஒன்று கட்டித்தர ஒரு திட்டமான யோசனையை பிரிட்டிஷ் எஞ்ஜினியரிங் கம்பெனி ஒன்று தெரிவித்திருக்கிறது.

இப்பாலம் கட்டி முடிந்தபின் இரண்டு வருஷ காலத்திற்கு இதன் வழியாகச்செல்லும்போக்குவரத்திலிருந்து வரிபெறும் உரிமையை அளிக்க வேண்டும் என்றும் இரண்டு வருஷ காலத்திற்குப்பின் இந்த பாலம் ஸிரிய சர்க்காருக்கு சொந்தமாகிவிடும் என்றும் அந்த யோசனை கூறுகிறது.

ஸிரிய சர்க்கார் இந்த யோசனையை குறித்து ஆலோசித்து வருகிறது.

சமூக சேவைப் பள்ளி

பரோடாவில் ஆரம்பம்

சென்னை, மே 24—

பரோடாவில் ஜூலை மாதமுதல் கொண்டு சமூக சேவை பயிற்சி பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறதென்று தெரியவருகிறது.

பரோடா எம். எஸ். சர்வகலாசாலையுடன் இப்பள்ளி இணைந்ததாக இருக்கும். சமூக சேவையில் இரண்டு ஆண்டு பயிற்சி பல சமூக துறையினில் அளிக்கப்படும்.

லண்டன், மே 24—

உலகிலேயே மிகப் பெரிய தகரம் உற்பத்தி தொழிற்சாலை வேல்ஸில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கு ஆரம்ப செலவு 600,000,000 பவுன் என்று சொல்லப்படுகிறது.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

26 - 5 - 50

கொற்கை:—எம். எஸ். இராமசாமி.

27 - 5 - 50

ஆமூர்:—சி. பி. சிற்றரசு

29 - 5 - 50

கிருஷ்ணகிரி:—சி. பி. சிற்றரசு.

கலகப் படைகள் அடங்கிவிடவில்லை

மூன்று திசைகளிலிருந்தும் தாக்க முஸ்தீப்பு

ரங்கூன், மே 24—

தென் பர்மாவிலுள்ளரோடு ரயில்வே இவைகளை கலகப் படை மூன்று திசைகளிலிருந்து தாக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

புரோம், டோங்கூ ஆகிய இடங்களிலிருந்து விரட்டப்பட்ட கலகப்படையினர் ஸிட்டாங் ஐராவதி நதிகளுக்கிடையே உள்ள குன்றுகளில் பதுங்கியிருப்பதாகவும், இவர்கள் திடீரென்று தங்கள் கைவரிசையைக் காட்டலாம் என்றும் கூறப்படுகிறது.

ஸிட்டாங்கிற்கு கிழக்கில் கேரன்களிடமிருந்து கொரில்லா நடவடிக்கையை எதிர்பார்க்கலாம்என்று கூறப்படுகிறது. சில புரோம் கலகப் படையினர் ஐராவதியைக் கடந்து நடவடிக்கைக்கு தயாராக இருக்கிறார்களாம்.

டோங்கூக்கு வடக்கிலும் புரோமிலும் இன்னும் கலகக்காரர்கள் சுறுசுறுப்பாகவே இருந்து வருவதாக கூறப்படுகிறது.

கேப்பை சாகுபடி

54 லட்சம் ஏகராவுக்கு மேல் இருக்கும்

இந்த ஆண்டு மொத்தம் 54 லட்சத்து 16 ஆயிரம் ஏகராவில் கேப்பை சாகுபடி செய்யப்பட்டிருப்பதாக பல்வேறு மாகாணங்களிலிருந்தும் கிடைத்துள்ள தகவல்களை ஆதாரமாகக்கொண்டு, மத்திய விவசாய இலாகாவின் பொருளாதார புள்ளி விவர டைரெக்டரேட் தயாரித்துள்ள 1949-50ம் இந்தியாவின் கேப்பைசாகுபடிபற்றியஇறுதிமதிப்பீடு கூறுகிறது. இந்த வருஷம் 14 லட்சத்து 38 ஆயிரம் டன் கேப்பை விளையுமென்றும், மதிப்பிடப்படுகிறது. முந்திய வருஷம் 5133 000 ஏகராவில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. 14,45,000 டன் கேப்பை உற்பத்தியாயிற்று, சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் சாகுபடி விஸ்தீரணம் 5.5 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. உற்பத்தி 0. 5 சத விகிதம் குறைந்திருக்கிறது.

1949-50ல் விஸ்தீரண அதிகரிப்பு, முக்கியமாக பம்பாய், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய இடங்களில் காணப்படுகிறது. விதைப்பு காலத்தில் பருவ நிலைமை அனுகூலமாக இருந்ததும், உணவு தானிய உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டதுமே இந்த விஸ்தரிப்புக்குக் காரணமென்று கூறப்படுகிறது. சாகுபடியாகும் பிரதேச விஸ்தீரணம் அதிகரித்திருந்தபோதிலும், இந்த வருஷம் உற்பத்தி அளவு சிறிது குறைந்திருக்கிறது. பம்பாயில் சில இடங்களில் அதிக மழையால் பயிர்கள் சேதமுற்றதும்; சென்னையில் புயலால் பயிர்கள் சேதமடைந்ததும், வடகிழக்கு பருவமழை பொய்த்துப்போனதும் உற்பத்திக்குறைவுக்குக் காரணமாகும்

இந்த மதிப்பீடு மொத்தத்தில் 1950 பிப்ரவரிக்கு முந்திய காலம் சம்பந்தியதாகும். அதுவரை பயிர்கள் திருப்திகரமாகயிருந்ததாகக்கூறப்பட்டது.

ஒரிஸ்ஸாவுடன் சேர்க்கப்பட்ட சமஸ்தானங்களுக்கானபுள்ளி விவரங்களும் இந்த மதிப்பீட்டில் அடங்கியுள்ளன.

ஹைதராபாத் மாணவர் பரிதாப மரணம்

கேம்ரிட்ஜில் நடந்த விபத்து

கேம்பிரிட்ஜ், மே 24—

ஹைதராபாத்திலிருந்து கேம்பிரிஜிக்குப் படிக்கச் சென்ற முகம்மது ஹபிதுல்லாகான் தன் அறையில் மாண்டு கிடந்தார். இவர் அறையிலிருந்து புகை வெளிப்பட்டுக்கொண்டிருந்ததாம். இவர் படிப்பில் கெட்டிக்காரராகவும். ஹைதராபாத்தில் முன்பு நடந்த சம்பவங்கள் இவர் உற்சாகத்தை குறைத்திருந்ததாம், இப்பொழுது இவர் மாண்டகாரணம் தெரியவில்லை. —(குளோப்)

கடத்தப்பட்ட கிரீஸ் குழந்தைகள் விடுதலை

டிட்டோவின் நல்லெண்ண சமிக்ஞை

ஏதென்ஸ், மே. 24—

கிரீஸில் உள்நாட்டுப்போர் நடைபெற்றபொழுது கம்யூனிஸ்டு கொரில்லாக்களால் கடத்திச் செல்லப்பட்ட கிரேக்க சிறுவர் சிறுமியர் இப்பொழுது டிட்டோ சர்க்காரால், நல்லெண்ணத்தின் அறிகுறியாக கிரீஸுக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். முதன் முதலாக கடத்தப்பட்ட 8 குழந்தைகள் சர்வதேச செஞ்சிலுவை சங்க மேற்பார்வையிலுள்ள ஏற்பாடுகள் மூலம் இங்குவந்து சேர்ந்திருக்கின்றனர்.

இனி நடப்பவை

சென்னை :—வண்ணைநம்பதி திருப்பூர் குமரன் வாசகசாலை கட்டிடத்தில் 27—5—50 சனி இரவு 7-30 மணிக்கு 'இந்தி அவசியமா?' என்ற பொருள் பற்றி பலர் விவாதிப்பர்.

* * *

29-5-50 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு பெருட்டினஸிரி காரேஷன் மைதானத்தில் "திராவிட முன்னேற்றக் கழக" துவக்கவிழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். மரா. செமோரான் அவர்கள் தலைமை வகிப்பார், வேலூர் சி. பி. சிற்றரசு சொற்பொழிவாற்றுவார்.

ஏஜண்டு தேவை

திருச்சியில் நமது "மாலை மணி" யை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு தேவை!

நிர்வாகி,
'மாலைமணி'

தேவை

நல்ல அனுபவமுள்ள "டிரெடில்மென்" ஒருவர் தேவை. அனுபவத்திற்கேற்ற ஊதியம் அளிக்கப்படும்.

மானேஜர்: "மாலைமணி"

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

காலம்:-மே 27, 28 சனி, ஞாயிறு

இடம்:-கோவை நகர் ஆர். எஸ். புரம் உயர்நிலைப்பள்ளித்திடலில் அமைந்துள்ள 'வள்ளுவர் பந்தல்'

★

தலைவர்:-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

திறப்பாளர்:-நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல்.

★

இயல் அரங்கு

சொற்பொழிவாளர்கள் :—தோழர்கள்

இராம. மீனாட்சிசுந்தரம் எம். ஏ,	என். வி. நடராசன்
சி. பி. சிற்றரசு	கே. ஏ. மதியழகன் பி. ஏ.
புலவர் நன்னன்	ப. கண்ணன்
கே. ஏ. பி. விசுவநாதன்	கு. மு. அண்ணல்தங்கோ
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	டி. கே. சீனிவாசன்
கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி.	அ. பொன்னம்பலனார்
மு. கருணாநிதி	க. அன்பழகன் எம். ஏ,
புலவர் ஔவை சு. துரைசாமி	ஏ. சித்தையன்
ஏ. கே. வேலன்	இரா. நெடுஞ்செழியன் எம். ஏ,
புலவர் வெள்ளைவாரணனார்	சி. என். அண்ணாதுரை எம். ஏ.

★

இசையரங்கு

இசைவாணர்கள் :—

என். எஸ். கிருஷ்ணன்
—வில்லுப்பாட்டு "வள்ளுவர் வரலாறு"
சி. எஸ். ஜெயராமன்
டி. வி. நமசிவாயம்
இராசமாணிக்க பாகவதர்

★

கூத்து அரங்கம்:-

"சந்திரமோகன்"
(27-5-50 இரவு)

"நீதிதேவன்மயக்கம்"
(28-5-50 இரவு)

நடிகர்கள்:-கே. ஆர் ராமசாமி, சி. என். ஏ., டி. வி. நாராயணசாமி, எஸ் எஸ். ராஜேந்திரன், க. அன்பழகன், ஈ.வி.கே. சம்பத், தோழர்கள் மற்றும் பலர்.

குறிப்பு;—P. S. G. தொழிற் கண்காட்சியும் கோவை முருகன் பவுண்டரி தொழிற் கண்காட்சியும் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வரவேற்புறுப்பினர் நன்கொடைக் கட்டணம் ரூ. 5—0—0
பிரதிநிதி .... ரூ. 2—0—0

எஸ். ஆர். சுப்பிரமணியம்,
ஜி. என். ராசு,
எஸ். ஏ. ராசமாணிக்கம்,
செயலாளர்கள்.
பி. பழனிசாமி,
பொருளாளர்.

ஈ. வெ. கி. சம்பத்
வரவேற்புக் குழு தலைவர்,
சி. வி. கோபால்,
விளம்பரச் செயலாளர்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1,